செய்தி வெளியீடு எண்: 612 நாள் :11.11.2013

<u>செய்தி வெளியீடு</u>

**11.11.2013** அன்று சென்னை எழிலகம் வருவாய் நிர்வாக கூட்டரங்கில்தமிழக அரசின் சார்பில் மகளிருக்கு வழங்கப்பட்டு வருகின்ற விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி ஆகிய பொருள்கள் விரைவாக வழங்குவது தொடர்பான ஆய்வுக்கூட்டம் **மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்கள் அவர்கள் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தோப்பு என்.டி. வெங்கடாஜலம் அவர்கள்** ஆகியோர் தலைமையில் அனைத்து மாவட்ட சிறப்புத் திட்ட துணை ஆட்சியர்கள் பங்கேற்ற கூட்டம் நடைபெற்றது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** ஆணைக்கிணங்க தமிழக அரசின் சார்பில் மகளிருக்கு வழங்கப்பட்டு வருகின்ற விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி ஆகிய பொருள்கள் **2013–14** ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பொருட்களை குறிப்பிட்ட காலத்திற்குள் விரைவாக வழங்குவது தொடர்பாக ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் துறை அமைச்சர் **திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி** அவர்கள் மற்றும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் **தோப்பு என்.டி. வெங்கடாஜலம்** அவர்கள் தலைமையில் அனைத்து மாவட்ட சிறப்புத் திட்ட துணை ஆட்சியர்கள் பங்கேற்ற கூட்டம் **11.11.2013** அன்று சென்னை சேப்பாக்கம், எழிலகம் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் **2013–14** ஆண்டிற்கு மகளிருக்கு வழங்கப்பட்டு வருகின்ற விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி ஆகியப் பொருட்களை குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்கப்பட வேண்டும் என்றும், சேவை மையங்களின் செயல்பாடுகள் மற்றும் அனுப்பப்படும் பொருட்களின் தரத்தினை ஆய்வு செய்திடவும்,சேமிப்பு கிடங்குகளில் வைக்கப்படுகின்ற மேற்கண்ட பொருள்களை உரிய முறையில் பாதுகாத்து பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும்அதிகாரிகளுக்கு மாண்புமிகு அமைச்சர்பெருமக்கள் ஆணையிட்டார்கள்.

இக்கூட்டத்தில் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை முதன்மைச் செயலர் **முனைவர் சாந்தினி கபூர், இ.ஆ.ப. அவர்கள்** வருவாய் **நிர்வாக இணை ஆணையர் திரு எஸ். ஜெயராமன், இ.ஆ.ப. அவர்கள்தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்**மேலாண்மை இயக்குநர் **திரு.எம்.சந்திரசேகர், இ.ஆ.ப.** அவர்கள், அனைத்து மாவட்ட சிறப்புத் திட்ட துணை ஆட்சியர்கள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9

.